III. Never look at a commentary or any explanatory text book until you have not only *thought out* but *put on paper* what you consider to be the meaning of the passage-and in what way you would bring to view the truths it suggests. This is a point of great importance. Commentaries, rightly used, are books of *great*, I should say *unspeakable* value to the Christian teacher-but if they are allowed to *rule* the mind instead of *directing* it-if they are permitted to *suggest* all the thoughts instead of the mind's eliciting them by its own innate energy-they are a curse and not a blessing. The same is true of printed sermons and other text books besides commentaries.

IV. Having by a close examination of each word of the passage ascertained beyond doubt *its first and literal meaning* and having, too by a careful study of the context and parallel passages-arrived at what you consider the *idea* that was designed to be communicated-and having noted down in a disconnected form (1) all the thoughts that your own mind elicits, and (2) all that you can gain from a commentary, &c. consider well the space of time that is allowed (if any is defined) for the sermon or exposition, and with a view to filling up that time in the most satisfactory manner, select from the crude mass thus thrown together the greatest amount of matter directly connected with the subject and most capable of being clearly explained and strongly enforced. Attempt not to say at one time all that might be said upon a passage but let the space of time allotted and the character of the audience you are to address guide you wisely on this point. One important truth clearly illustrated and forcibly impressed upon the minds and memories of your hearers is better than an hundred which they hardly understand, and will forget as soon as they leave you. It is said of the sermons of that most eminent preacher Dr. Chalmers, of Scotland-that many of his best discourses contain but two or three ideas but these he exhibits and illustrates in such a variety of ways that when his hearers go home they cannot forget what they have heard.

V. Make all your remarks bear directly upon the subject before you. Many sermons do not seem to be upon any text in particular. They bring to view such a variety of subjects that though the preacher may have announced his text in the beginning the hearers quite forget or lose sight of it as he goes along. Often repeat your text and connect all your remarks and illustrations directly with it. The following anecdote will bring to view the injurious practice I would have you avoid.-It is said of a preacher that he addressed his audience at one time thus "My hearers, you will find my text in Deut. chapter verse. I will first preach to it-and then through it and then away from it-and then close." He accordingly began with the first chapter of Genesis and stated all the leading facts and doctrines from it to the text-that was preaching to it, he then expounded the passage-that was preaching through it, he then flew off into an exhortation that had nothing to do with the verse in hand—that was preaching away from it, and thus he wound up his sermon. This anecdote too aptly illustrates a great number of sermons preached. Strike out every sentence that is not connected with your text or which does not tend to make more clear or more forcible its meaning.

VI. Sanctify your arguments appeals, &c. by apt quotations from the Bible.-I say *apt quotations* because many preachers seem to recite texts rather to fill up the time-or aid in completing the sermon than to render clear and forcible the thoughts suggested. Quote just so much as you want and no more, but be careful, (1) that what you do quote is *in the Bible*. (This is not an unnecessary caution as I might show if time allowed) and (2) to quote literally. I do not think there is any divine power in mere *words* but you cannot improve the language of the Bible, (I refer now to the English Bible) and moreover if you are arguing a point your antagonist will not allow you to alter a line or letter of the text as it stands. You will see at once that in order to quote the Bible aptly and correctly you must not only *read* but *study* that volume-and need I press upon you that duty? Leaving out of view the fact that it is the text book of your profession (as Blackstone's commentaries on Law are to the Barrister, or Sir Ashley Cooper's Lectures to the Surgeon) it is a book you profess to reverence and love above all other volumes. In order to be a successful teacher of the Bible you must be a constant and prayerful student of that Book—"In understanding be men."

VII. Never close a discourse without naming briefly though it be, in some of its various forms, the mode of salvation through Jesus Christ and the means that must be used in order to obtain the invaluable blessings He came to bestow on mankind. This rule is important in all countries but emphatically in *this* where there may *probably* be persons present who have never before heard a sermon from a Christian teacher and who may seldom if ever hear one again.—That *one* discourse from your lips may instrumentally open to him the gates of the new Jerusalem, but even though it do not, yet be careful that it allows not his mind to remain in ignorance of Him who is "the Way-the Truth—and the Life."

VIII. Never continue to speak merely to fill up the time. I know that necessity almost compels, at times, to such a course—but it is an unhappy necessity, and should be if possible avoided. *"Sit down when you have got through"* is a quaint but excellent motto for every public speaker.

W.

LETTERS BY THE REV. D. POOR,

Addressed to his pupils, formerly members of the Batticotta Seminary.

LETTER I.

Introductory.

MY YOUNG FRIENDS,

For more than a quarter of a century, a large portion of my time has been spent in duties and labours, intimately connected with your maintenance and education. This I have done, not by constraint but with a willing mind,—not in doubt or despondency, but with confident hope, that the ultimate object aimed at, in my labours with you, will, in due time be fully realized. Much, however, depends upon the manner, in which you as individuals, and as a body, acquit yourself in life, as to whether I shall have the pleasure or not, of realizing to any great extent, the object of my hopes or wishes, before leaving the field, in which I have hitherto laboured. Under these circumstances, I cannot but cherish a lively interest in your welfare, and a desire to render you, if possible, some futher assistance. An absence of five years from the island, has by no means diminished this feeling of interest in your affairs. On my return, I find many of you advanced to important situations in various departments of society, and removed some to different and distant parts of the island and others to the adjacent continent. I have had opportunity therefore of renewing my acquaintance with but few of you, excepting those in immediate connexion with the American mission. But being desirous of holding further intercourse with you on a variety of subjects, I have resolved, as a substitute for personal intercourse, to address a short series of letters to you, through the medium of the *"Morning Star."*

The object of these letters will be,

1. To give you an appropriate expression of my *remembrance* of you, and of my continued *interest* in your welfare.

2. To aid you in understanding the novel and peculiar *position* in which you are placed in society, and to turn your attention to some of the more prominent duties arising from the peculiarity of your present circumstances.

3. To invite a reciprocation of views and feelings on your part, that I may the better understand what are your present circumstances, and future prospects, and know something of the results of your experience and observation, thus far on your journey in life.

I address these letters to you through the medium of the "Morning Star," under the impression that a majority of you are subscribers to this publication. It is, you are aware, the first periodical in the Tamil language, published in the island. It was designed, generally for the rising generation

of Tamulians, who have been brought under a course of instruction, but more especially for those, who have enjoyed the advantages of a superior education, and who are supposed to take an interest in the promotion of science and literature, and of other branches of useful information, among their countrymen It is a publication designed eminently for *yourselves*, for the double purpose of imparting benefit to you, and of furnishing you with a medium, through which you may, as your abilities and circumstances will allow, impart benefit to the community at large While perusing the pages of the "Star," and reaping the fruits of the labours of others, forget not that it is expected of you, in turn, to contribute something that will be productive of pleasure and profit to others For "concerning *giving* and *receiving*" you will "remember the words of the Lord Jesus, how he said, ***It is more blessed to give, than to receive*** " The object of the "Morning Star," therefore, being similar to that which I have in view in writing these letters you will perceive the propriety of my addressing you through this medium

For obvious reasons, I purpose to address you in the *English* language only If you deem the sentiments contained in these letters, worthy the attention of any of your friends, who have not been instructed in that language, you may do them service, by communicating to them the substance of what I write in their own language

I have marked out to myself a certain course to be pursued in this series of letters, but it will be an object of no importance with me, rigidly to pursue that course, nor to observe any very obvious connexion between the foregoing and succeeding letters I may occasionally be diverted from the course marked out, either by passing events, or by the suggestion of appropriate topics, which had not been previously suggested to my mind The principal object at which I shall aim in each letter, will be to furnish some one topic, at least, that shall be worthy of your careful consideration

Allow me to close this introductory letter with expressions of good will, and best wishes for your welfare

Tillipally, December 1st, 1842 D Poor

[Counsels to the heathen who are opposing the efforts of the Missionaries]

சதுர் வேதசித்தாந்த சங்கமேரி கங்கம்.

உதயதாரகை எடிற்றா அவர்களுக்குப் பலகாலும் வந்தனம்.

ஐயாவே,—சதுர்வேத சித்தாந்த சபையைச் சார்ந்த இந்துமத சித்தாந்த சபையின் முகாமைத் துரைகளுக்கு எழுதிக்கொள்ளும் இந்த நிருபத்துக்குத் தமது பத்திரிகையினகண் இடங்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

முன் சொல்லிய சபையார் தங்கள் மனதில் ஆணவங்கொண்டு உண்மையான கிறிஸ்து மார்க்கத்தைப் பழித்து அத்தை அழித்துப் போடுவோமென்றெண்ணிப் புரளிபண்ணிக்கொண்டு வரும் முயற்சிகளைப் பற்றி, அருணோதயப் பத்திரிகையில் வாசித்தவுடனே நான் சிரித்து அவர்கள் பேரிற்கொண்ட அன்பினாலேவப்பட்டுச் சில புத்திமதிகளை எழுதலுற்றேன் என்னவெனில்,

அப்போஸ்தலர் நடபடி (௰௯)அதிகாரத்திற் சொல்லிய தியானாள் என்ற தேவியின் சரித்திரத்தை வாசித்தறியவில்லையா? அவளுக்கும் அவள் கோவிலுக்கும் வந்த கூறுபாடுகளை யோசித்துப் பாராமல் இருக்கிறீர்களா? அந்த மகத்துவமான கோவிலும் விக்கிரகமும் அதின் ஆராதனைக்காரரும் எங்கே? அதற்கு என்ன சம்பவித்ததென்றறியீர்களா? எலியாத் தீர்க்கதரிசி காலத்தில் வணங்கப்பட்ட பாகால் விக்கிரகத்தின் செய்தியையுந் தெரியாமல், அறியாமல், உணராமல் வீண் முயற்சிகளைக்கொண்டு மெய்த் தேவனுக்குக் கோபமுண்டாக்கலாமா? அவரால் அருளப்பட்ட மெய் மார்க்கத்தைக் கொலைத்துப்போடுவோமென்றெண்ணலாமா? எண்ணியுங் கூடுமா? அப்போஸ்தலர் நடபடி ௫ அதி ௩௮, ௩௯ வசனம் எல்லாரும் கனம்பெற்றுக்கொண்ட வேதசாஸ்திரியாகிய கமாலியேல் என்னப்பட்ட பரிசேயன் பெரிய சங்கத்தாருக்குச் சொன்ன புத்தி இந்த மனிதர்களுடைய யோசனை அல்லது இவர்களுடைய கிரியை மனிதரால் உண்டானதானால் அது ஒழிந்துபோம். அது பராபரனால் உண்டானால் அதை நீங்கள் ஒழித்துப்போடமாட்டீர்கள் ஆகையால் நீங்கள் பராபரனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்கு இவர்களுக்கு ஒன்றுஞ் செய்யாமல் விடுங்களென்றான் என்பதை அறியீர்கள்போலும். மேலும், அப்போஸ் ௰௨ அதி ௨௧, ௨௨. வசனம் அப்பொழுது ஏரோதையானவன் இராச அங்கியைத் தரித்துக்கொண்டு சிம்மாசனத்தின் மேல் உட்கார்ந்து அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான் அதற்கு சனங்கள் இது ஒரு மனிதனுடைய சத்தமல்லத் தேவனுடைய சத்தமேயென்று கூப்பிட்டார்கள் அவன் பராபரனுக்கே புகழ்ச்சியுண்டாவதாகவென்று அறிக்கையிடாதபடியினாலே உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுக்களாலே தின்னப்பட்டிறந்தான் பராபரனுடைய வசனம் வளர்ந்து பெருகுகிறதை ஒருக்காலும் வாசித்தறியவில்லையா. பயப்படாமலுமிருக்கிறீர்களா?

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும்படி தமஸ்கு ஊருக்குப்போன வழியில் கிறிஸ்துநாதர் அவனுக்குக் காணப்பட்டு முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று சொல்லி எச்சரித்ததையும் அறியாமற் பராபரனுக்கும் அவருடைய அபிஷேகருக்கும் விரோதமாக நீங்கள் செய்து வரும் முறைகேடான முயற்சியை விட்டோய்ந்து புத்தியுள்ளவர்களாய் நடக்கவேணுமென்று விரும்பி,

யாழ்ப்பாணம் உங்கள் நயத்தை ஆசித்திருக்கிற
இந்துமதபேதி.

(On Grammatical Tenses)

ஸ்ரீ ஸ்ரீ துரையவர்களே, இதற்குத் தயவுசெய்வீராக.

இலக்கண நுட்பவிசாரணைகாரனுக்கும் யாழ்ப்பாண மாணாக்கனுக்குஞ் சமாதானம்.

"எண்ணம்" என்றது முக்காலத்துக்கும் வருமா? "கண்டேன்" என்றதொரு பொருளைத் தருமா? என வினாவிய வினா, நல்லூர் மனப்புலி முதலியார் சரவணமுத்து போலும் இலக்கணிகளைத் தாரகையில் அபாயமாயகப்படுத்தற்கிலக்கண நுட்பவிசாரணைகாரனெடுத்த உபாயமாயிருக்கின்றது. எண்ணம் என்ற சொல் முக்காலத்துக்கும் வரும் கண்டேனென்றதொரு பொருளைத் தரும், எவ்வுளியெனின் அவன் கைக்கூலி வாங்கிறதே யெண்ணம், இதில் அவன் வாங்கி இருக்கவுங் கூடும் இப்போ வாங்கிறதாயும் வரக்கூடும் இனிமேல் வாங்கவுங்கூடும் ஆகையால் அவர் கச்சேரியில் ஒருவர் முன் எண்ணமென்றது வருகாலம் செல்காலம் நிகழ்காலமென்னுமுக்காலத்துக்கும் வருமெனக் கூறினார். மாணாக்கன் சிற்றறிவை எண்ணித் தானகொண்ட கோபமாறினார் தாரகையில் எழுவரைக் கொண்டுசீறினார் இன்னுமென்னை எழுதச் சொல்லித் தேறினார் இதையல்லவென்று உண்மைப் புலவர்கள் சொல்வார்களா? ஆசிரியர்போலும் இலக்கணிகளை வெல்வார்களா? சொல்லுங்கள் எதிர் நியாயம் சொல்லவேவார்தென்றுல இலக்கணம் மறுவிதமாக ஆசிரியர் இடத்திற் கல்லுங்கள் இடைக்கணத் தாக்கம் போவிதிலத் தொயந்துபோவாரென்றெண்ணவேண்டாம். இலக்கணிகளெனப்பெயர்கொண்டு தாரகையில் நண்ண வேண்டாம் சோடசாவதானப் புலவர்களும் இத்தை அறியக்கூடுமா? தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியாரெங்கே? அவரேனுமிதற்கு நியாயஞ் சொல்லட்டுமேன், ஆனை படுத்தாற் குதிரை அளவாகுதல்லவா? இலக்கணமறியாப்புலவர்களோடு தாக்கிப்பது நமக்கென்ன தொல்லையா? எண்ணமென்றதற்குங் கண்டேனென்றதற்கும் பொருளொன்றுயக் காட்டினேன். ஆசிரியர் புகலையுந் தாரகையிலகாட்டினேன் அத்தனைபேரை இவ்வளவு தந்தரமாய மாட்டினேன், மகா கனம்பொருந்திய ம றி றி. சோடசாவதானப் புலவர் வேதகிரிமுதலியாருக்கு வந்தனமுந் தந்தேன்.

இப்படிக்கு

வண்ணைநகரில் ஒருவர் கடாட்சவீட்சணம் பெற்றுப் பஞ்ச இலக்கணமுங் கற்ற ஓர் மாணாக்கன்

பத்திராதிபதியே பதினாறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ்வும்

[Explanation of a verse in Cural requested]

மகா கனம்பொருந்திய ஸ்ரீ ஸ்ரீ. துரையவர்களுக்குத் தெண்டம்

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்த "குறள்" ௯௭ம் அதிகாரம் ௯ம் செய்யுள் "மயிர்நீப்பின் வாழாக்கவரிமாவன்னாருயிர்நீப்பர் மானம்வரின்" இ-ள் மயிர்நீப்பின் (தன்மயிர்த்திரளிலொரு) மயிரையிழந்தாலும் வாழா (உயிர்) வாழாத கவரிமா கவரிமானை அன்னார் ஒப்பவர் உயிர் நீப்பர் (தம்)முயிரையிழப்பர் மானம்வரின் மானத்தைப்(பொருந்தமெல்லை)வரினென்றவாறு இச்செய்யுளிற் கவரிமான் தன்மயிர்த்திரளிலொரு மயிரை இழந்தாலும் தன்னுயிரை வைத்திராமல் செத்துப்போமென்று சொன்னது உண்மையோ அல்லது இச்செய்யுளின் கருத்து வேறேதும் பொருளைவிளக்குதோவெனச் சிற்றறிவோனுக்கு விளங்காமையால் முற்றறிவோர் யாரேனுங்கற்றறி புலவர் பத்திரமாகிய தாரகையில் அடியேனுக்குச் சற்றறிவிக்கப் பிரார்த்திக்கி

றேன், அன்றியும் கவரிமா ஒரு மயிரிழந்தாலும செத்துப் போவது இங்கிலீசுவிலங்குகளைபபற்றிய புத்தகங்களிற் சொலலியிருக்கிறதோவெனப் பத்திராதிபதி அறிவிக்க மனறுடுகிறேன். பிழைகளிருந்தாற்றிருத்திக்கொள்வது புலவா கடன.

இப்படிக்கு

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாா திருக் குறள்ப் பிரியன்.

P. J.

உதயதாரகைப் பத்திரிகையை நடத்துகிறவருக்கு விண்ணப்பம.

அருமையான தாரகையே,

இந்த இந்து தேசத்திலுள்ள சமஸ்த மனிதரையும் கணக்கிட்ட புத்திமானகள் இதிலே சற்றேறக் குறையப பதினைந்துகோடி சனங்களுண்டென்று சொல்லுகிறார்கள். இத்தேசத்தார் வணங்குகிற தேவர்களோ முப்பத்துமுக்கோடி என்றும் இவர்களுக்கு மேலாகப் பஞ்ச கர்த்தாக்கள் இருககிறாாகளென்றும அவாகளுக்கு மேலாகத் திரிமூர்த்திகளிருககிறாாகளென்றும் ஸ்தபமதஞ் சொலலுகின்றது. இத்தேவாகளை எலலாம சாஸ்திரவழியாய் ஆராய்ச்சிபண்ணின ஞானவானகளோ இவாகள் தேவாகளலலவென்றும் இவர்களுக்கு மேலான சுயமபுவாகிய ஓர் கடவுள் இருக்கிறாரென்றும் அவருடைய பேரையும இலடசணத்தையுங கிரகிக்ககூடாதென்றும அறிவித்திருக்கிறாாகள்.

விருத்தம்

கடவுளொருவனுண்டே வேதமொன்றே காரணசற்குருதீட்சைதானுமொனறே
அடைவுடனே அவாருளும்பதவியொன்றே அம்புவியில் மனுப்பிறவியானதொனறே
நடைவழியும் பலமனுவோர்க்கொன்றேயல்லால் நாலவேதம் அறுசமயநடக்கையுண்டோ
திடமுடைய தேவர் பலருண்டென்போர்கள் தீப்நரகுக்காளாவா திண்ணநதானே,

எனறு கொங்கணர் சொன்னார்.

கேளுங்கள், கிறிஸ்துமததமோ அந்த ஒரே கடவுள் இன்னின்ன இலடசணமுடையவரெனறும, அவா இனனநாமமுள்ளவரென்றுந் தெளிவாய் விளக்குகின்றது ஸ்தப மதத்தாருக்கு வேதமிருந்தால அத்தையே எல்லாரும் அறிந்து அதனபடி நடக்கக் கவலைபபடுவாாகள் அதிலலாமையினால அவாகள் மற்றவாகளுககொணடிருந்தால தஙகளுக்கு நாலு வேதம உணடெனறும அவைகளில் இருநது ஆறுவித சாஸ்திரஙகளும பதினெணவித புராணஙகளும அறுபத்துநானகு கலைகியானஙகளும தொணணூற்றாறு தத்துவஙகளும இனனும பல விபரீதங்களுமுடைத்தனவெனறுசொலலிககொள்ளுகிறார்கள் கிறிஸ்து மததமோ பராபரன் மனிதருக்கு அருளிசசெயத வேதமிதுவேதென்றும அது இனன காரணத்துக்காக அளிககபபட்டதெனறும யாவருககுந தெளிவாய உணாத்துகிறது ஆதலால விவேகிகளாயிருபபவாகள் இவவிரணடு மதஙகளிலுமுள்ள காடசிகளை அறிநதுணருமபோது ஸ்தப மதமானது பதரெனறுங கிறிஸ்து மததமோ மணியெனறு முணர்ந்துகொணடு கிறிஸ்துவின உத்தாரபபடி அதைப பற்றிககொண்டு தங்கள் சுவாசமென்னும மோடச வீடடை மணணினமேலலல. கற்பாறையாகிய கிறிஸ்துவைப் பற்றும விசுவாசத்தின மேற் கட்டுகிறாாகளெனறு உறுதியாக அறிந்துகொளவீர்களாக

உமது பணிவிடைகாரன

மன்மதப்பொடி மாமனப்பொடி.

[Translation of the above]

Thanks to the Editor

My dear Star,

The average number of people in India, according to the computation of intelligent men, is 15,000,000, and their gods are 33 millions, and 5 principal gods exercise sway over these gods and men, and in fine, 3 gods govern all these 33 millions of gods, 15 millions of men, &c But in opposition to this, sages and other intelligent men, who have examined the attributes of these gods, uniformly acknowledge that they are not *gods*, and that there is only one true and self-existent GOD, and that *we* cannot make any *idea* even of his name and attributes In proof of this, it is said in Hinduism itself, that "there is only one God, there is only one Veda, there is only one Guru, there is only one heaven, and there is only one birth in the world," but not four Veda, six Shastras, 64 arts, 18 Puranas, and 96 qualities of things, and that those who acknowledge the existence of many gods will be subject to hell fire

Hear! the Christian religion only shows, who is that GOD, and what are his attributes? and the Christian religion only sets forth the true Vedam, and the reason, for giving that Vedam

In view of this, when an intelligent man contrasts Christianity with Hinduism, he knows very well that Hinduism is chaff, and Christianity is corn, and consequently the Christians build their houses on the rock, which is Jesus Christ.

Yours most obediently,

Manmathapody Mamanapody

உதயதாரகையின் எட்டிற்றர் துரையவாகளுக்குச் சிரஞ்சீவியுண்டாவதாக,

தங்கள் பத்திரிகை ஒனறின் கண்ணே "கற்பனுகௌரவம" என்பதியாது என வண்ணை நகர் மாணாக்கன் வினவிய வினாவைக் குறித்த புலவர்கள் வாசிககாமல் விட்டுவிட்டார்களோ? அல்லது வாசித்தும விளஙகாமல விடடுவிட்டாாகளோ அலலது கடதாசி பேனையிலலாமல விட்டுவிடடாாகளோ? அல்லது சொல்லிககொடுக்கினுண்மைசொலலிககொடுககிறது எங்கள் வழப்பமலல பொய்சொனனாலுண்மைப்புலவர்கள் இலக்கணநூலாலிடிப்பார்களெனறெண்ணி விட்டுவிட்டார்களோ அலலது கற்பனுகௌரவம் விளஙகவிலலையோ? வேதகிரியோடிணஙகவிலலையோ? வினவிய மாணாக்கனும் நித்திரையாய்ப போனாரோ அறிந்திலன் அவரெஙகேயெனத் தெரிந்திலனே ஏன் பேசாமலிருக்கிறாரோ பிரிந்திலன் இலக்கணத்தராசு இவர் நேசர்காட்டிய சொற்களில்விளங்கக்கூடாதவையெலலாம அடுத்த களஞ்சியத்தில விளங்கப்பணணியசோடசாவதானிககு நிகரெனன இவரெத்தனை சொலலுக்களை அறிவித்தாா எத்தனை இலக்கண நூலகளின்பெயரையும் அந்நூலகளின் பொழிப்பையுங் காடடினாா களஞ்சியவழியாயெமக்கு நீட்டினார் ஆகையால அவரைத் துதிககிறோம்மதிக்கிறோம், கற்பனுகௌரவம அறிந்த வரத்தைக் கட்டுப்பெடடிககுள்ளே வைககட்டும. "அச்சிரமபோடல, கற்பனுகௌரவம" எனறதற்கு மறுபேர் விடை எழுத மனமுறுகிறேன

இப்படிககு, சி காசி

சதன விளக்கம்.

(Ominous occurrences)

க. ஒரு நாயூளையிடக்கேடடில அதற்கு மூச்சுக்குடலும் உனககுச் செவியும உணடென்றறியலாம

உ. பழங்கனி யெதிர்ப்பட்டால தோட்டம் அறுக்கையாயிருந்ததெனறறியலாம்.

ங. தேவடியாளைக்கண்டால் இது கலியுகமென்றறியலாம்

ச பல்லி கிமித்தஞ் சொலலக்கேட்டால் அது தின்கிறதற்குப் பூச்சி பிடிக்கவிலலையென்றறியலாம.

ரு. பணடாரங்களுசாடக்கண்டால் சோம்பலும் எத்துநாதலையவிலலையெனறறியலாம.

சு கூரையிலே நாயேறினால வீட்டுத்தாழவாரம் எப்படியோ நிலத்துக்குக் கிட்டினதெனறறியலாம.

எ பஞ்சமியிலே பாமபு வீடடுக்குள்ளேவந்தால பாம்பு கிடக்க வேணடிய இடத்தில மறித்துக்கோள்ளவாலசந்திரனுக்குக் கவலையிலலையெனறறியலாம.

அ. தேவா கூத்தாடக் கணக்கணடால கட்டுக்கதைக்குங் கனவுக்குஞ் சமபநதமுணடெனறறியலாம்

கூ சாரை குறுக்கேபோனால நீ பயந்து பின்னிடடுப்போகாவிட்டால அது போனதற்குக் குறுககாக நீயும போவாயெனறறியலாம

ய வீடடிலே கூகையுறுமினால அதற்கு மந்தவோசையல்லாமல கிசசோசையில்லைகூவாதெனறும் உனனுடையகோழிக்குஞ்சுகளில இயாதொனறை இருஞ்சிககோள்ள மனதாயிருக்குதெனறும அறியலாம.

யக. ஒரு அறுதலி எதிாப்பட்டால நீ சாவுக்குரியஉலகத்தில்ச் சீவிக்கிறாயென்றும இந்தப் பயனற்ற சகுனங்களைக் கவனித்துக் காலத்தை வீணிற்போககப்படாதென்றும் அறியலாம.

பஞ்ச தந்திரக் கதை

மூன்றாவது.

சந்திவிக்கிரகம், அல்லது அடுத்துக்கெடுத்தல்.

PANCHA-TANTRA-KATEI

The art of conquering an enemy by means of an affected friendship

[Continued from page 272.]

ஒரு நாள் மயில் முதலாகிய பறவைகளெல்லாங் கூடியிருந்து நமக்கெல்லாங் கருடன் அரசனாயிருந்தும், நம்மைக் கொல்லுகிற வேடர்களினின்றும் நம்மைக் காப்பாற்றாமல் இதொன்றுந் தெரியாமலிருக்கிறான் இத்தன்மையுடைய இறைவன் இருந்தும் பயனென்னை? ஆதலால் நமக்கரசனை வேண்டாமென்போமானால் மீகாமனில்லாத கப்பல் கரைகாணாதது போல அரசனில்லாவிட்டால் நிலைகெட்டுப்போவோம், ஆகையால் எல்லாப் பறவைகட்கும் அரசனாகக் கோட்டானை நியமிக்கவேண்டுமென நிச்சயித்து இராசபட்டாபிஷேகத்துக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துப் பின்பு பலவாச்சியங்களை முழக்கிக் கோட்டானைச் சிங்காசனத்தின்மேலுட்காருவிக்கவேண்டுமென்றிருக்கையில் ஒரு காகம் வந்து அவற்றைப் பார்த்து, இதென்ன காரியம்! இதென்ன காரியம்! என, அப்போது எல்லாப் பறவைகளும், பறவைகளில் வஞ்சகமுள்ளது காகமும், மனிதரில் நாவிதனும், விலங்குகளில் நரியும், மாதர்களிற் பணிப்பெண்ணுஞ் சதுரர்களாயிருக்கிறார்கள் ஆதலால், இச்செய்தியை இதற்குச் சொல்லி இதன் உடன்பாடுபெறவேண்டுமென்று நிதானித்து அத்தைப் பார்த்து எங்களுக்கு அரசனில்லாமையால் இக்கூகையை அரசனாக்கிக்கொள்ளுகிறோம், இதற்கு நீயும் உடன்படென இதைக்கேட்டு அந்தக் காகம் நகைத்துச் சிரகம்பனம் பண்ணிச் சொல்லுகிறது, ஓ, ஓ! இது முழுதுங் கெட்ட காரியம் ஏனென்றால், அழகும் வல்லமையுமுண்டாய மயில் முதலாகிய அநேகம் பறவைகளிருக்கையில், இந்தப் பகற் குருடாகிய குரூபி அரசனாகத் தக்கவனோ? குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளலாமா? தோலோ தோல—இதற்கு நானுடன்படேன் கருடராசனிருக்கையில் மிகவும் பயங்கர சுபாபமும் வலியின்மையுமுள்ள இக்கூகையை அரசனாக்கி உங்கட்குப் பலனென்னை? ஒருவன் சுவாமியாயிருக்க வேறொருவன் குணசாலியாய் அகப்பட்டாலும் அவனுபயோகியாகான். பராக்கிரமமுங் குணமுமுள்ள அரசன் உலகத்திலொருவனே போதும் பலபேர் அரசர்களானால் மனிதர்கள் துன்பமடைகிறார்கள் கருடன் பேரினாலேயே எல்லா வரங்களும் பெற்று மனிதர்கள் நம்மிடத்தில் மதிப்புண்டாயிருக்கிறார்கள் வலியவர்களுடைய பேரினாலே எளியவர்களுக்குக் காரியமாகின்றது முன்னொரு முயல் சந்திரவிம்பத்தைக் காட்டிச் சுகமடைந்ததை அறியீர்களோவென, அதைக் கேட்ட பறவைகள் முயல் எப்படிச் சுகமடைந்தது, அதைச் சொல்லவேண்டுமெனக் காகஞ் சொல்லலுற்றது

ஒரு காட்டில் சதுரதந்தனென்னும் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழை பெய்யாமையால் ஆறு, ஏரி, குளம், குட்டை, கயங்களெல்லாம் வற்றிப்போக அப்போது யானைகளெல்லாந் தாகித்துச் சதுரதந்தனைப் பார்த்துச் சுவாமி, நாங்களெல்லாந் தாகத்தின் பொருட்டுச் செத்தாற்போலானோம் சிலர் தண்ணீர்க்காகச் செத்தார்கள். ஆகையால் மிகவுந் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானால் எல்லாருஞ் சுகமடைவோமென, இவற்றின் பேச்சைக் கேட்டுத் தன் மனதில் யோசித்து, இதற்கு ஐந்து நாட் பிரயாண தூரத்தில் ஒரு பெரிய மடு பாதாள கங்கையினால் நிறைந்திருக்கின்றது. அங்கே போனால் எல்லோர்க்கும் மிகவுந் தண்ணீர் கிடைக்குமென்றிப்படியுறுதிசெய்துகொண்டு அப்படியே அங்கே போய்த் தெளிந்த நீரைக்கண்டு அந்திவரைக்குஞ் சலக்கிரீடை செய்துகொண்டிருந்து கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம்பண்ணிக்கொண்டிருந்த வெகு முசல்களிற்சில, யானைகளின் காலின் கீழ்ப்பட்டிறந்தன, சில சில முயல்களுக்குக் கால் கைகளொடிந்தன, சிலவற்றிற்குக் குடல்கள் நெருங்கின, சிலவற்றிற்குக் குடல்கள் சரிந்தன, சில சில இரத்தத்தானிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே சில முயல்களொன்றாய்க் கூடி இன்றைக்கு யானைக் கூட்டம் வந்து நம்மை அழித்தது, இப்படியே தினமிருக்கும் ஏனெனில் இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை, இதனாலே நமக்கு மீளாச் சங்கடம் நேரிட்டது.

[இன்னும் வரும்]

௫. அதிகாரம்.

இல்வாழ்க்கை—*The domestic state*

௫௦ வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன்வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

பு. இல்லறத்தோடு கூடிவாழவேண்டியபடிவைத்து உலகத்தில் வாழ்கிறவன் இந்த உலகத்தான். ஆனாலும் வானுலகத்திலே வாசம்பண்ணுகின்ற தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

He who on earth has lived in the conjugal state as he should live will be placed among the gods who dwell in heaven. *Drew.*

Who in domestic joy thus lives on earth
May with the gods, heaven's denizens, be ranked
Ellis.

௬. அதிகாரம்.

வாழ்க்கைத் துணை நலம்.

௫௧ மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள்வாழ்க்கைத் துணை.

பு. மனையறத்துக்குத்தக்க (நற்குணம் நற்செயல்களாகிய) சிறப்புடையவளாகி, தன்னை (விவாகஞ்செய்து) கொண்டவனுடைய வரவுக்குத்தக்கபடி சமு[illegible] அந்த இல்வாழ்க்கைக்குத் துணையாம்.

She who has the excellence of home virtues, and can prudently expend the property of her husband, is a help in the domestic state. *Drew.*

To every household duty fitly trained,
The wife should to her husband be in all
A help-mate meet. *Ellis.*

௫௨ மனைமாட்சியில்லாள்கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித்தாயினுமில்.

பு. மனைஅறத்துக்குத்தக்க (நற்குண நற்செய்கைகளாகிய) சிறப்பு, (ஒருவனுடைய) மனைவியிடத்தில் இல்லையானால், (அந்த) இல்வாழ்க்கையானது (செல்வத்தினாலே) எவ்வளவு சிறப்புடையதானாலுஞ் (சிறப்பு) இல்லை.

If the wife be without domestic excellence, whatever (other) greatness (be possessed) in the conjugal state, it is nothing. *Drew*

The wife maintains the glory of the house,
All other glory, if she fail in this,
As if it were not, is. *Ellis*